கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு

முன்னிலை: முனைவர். கி.இராமநாதன்,

கூடுதல் மாவட்ட நீதிபதி

செங்கல்பட்டு.

2018, ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21 ஆம் நாள் புதன்கிழமை

அசல் வழக்கு எண்.139/2011

1.ஜி.ஆதிமூலம் ..வாதி

/எதிர்/

1.ஜி.பூங்காவனம்
2.ஜி.ராமானுஜம்
3.ஜி.மாதவன் ...பிரதிவாதிகள்

WEB COPY

இந்த வழக்கு என் முன்பாக 9.2.2018 அன்று இறுதிவிசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் திருவாளர்கள்.கே.மீனாட்சிசுந்தரம், திரு.கே.வி.சண்முகநாதன், திரு.அனந்தீஸ்வரன், வழக்கறிஞர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் திரு.பி.சீதாராமன், திரு.டி.எஸ்.விஜயராகவன், வழக்கறிஞர்கள் முன்னிலையாகியும், இது நாள் வரை இந்நீதிமன்ற நிலுவையில் இருந்த இவ் வழக்கில், இருதரப்பு வாதுரைகளை கேட்டு, சாட்சிய சான்றாவணங்களின் சீரிய பரிசீலனைக்குப்பின்னர் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

தீர்ப்பு

தாவா சொத்தினை நான்கு சரிசம பாகங்களாக பிரித்து அதில் வாதியும், 3-ம் பிரதிவாதியும் மட்டும் உபயோகப்படுத்தும் வகையில் தேவையான பாதை அமைக்கப்பட்டும், அந்த பகுதி வாதிக்கும் மற்றும் 3-ம் பிரதிவாதிக்கும்

கிடைக்கின்ற வகையில் பிரிக்கப்பட்டும், அவ்வாறு தாவா சொத்து பிரிக்கப்பட்ட பகுதியில் ஒரு பாகமும் மற்றும் வாதிக்கும் 3-ம் பிரதிவாதிக்காக மட்டும் உபயோகப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்ட பாதையில் வாதிக்கு 50% உரிமை கிடைக்கத்தக்க வகையிலும் பிரிக்கப்படவேண்டும் என பாகப்பிரிவினை கோரி வாதி தாக்கல் செய்த வழக்கு.

2. <u>**தாவாவின் சுருக்கம் பின்வருமாறு:-**</u>

1 முதல் 3 பிரதிவாதிகள், வாதியின் சகோதரர்கள். முதல் பிரதிவாதி மூத்த சகோதரர். 2-ம் பிரதிவாதி 2-வது மூத்த சகோதரர். 3-ம் பிரதிவாதி, வாதிக்கு இளைய சகோதரர். வாதியும், பிரதிவாதிகளும் சர்வே எண் 14/10, புது டி.எஸ். எண் 11/5 ஆலந்தூர் கிராமத்தில் உள்ள 42 செண்ட் விஸ்தீரணம் கொண்ட காலிஇடத்தினை பாலகிருஷ்ண ரெட்டியார் என்பவரிடமிருந்து கிரயம் பெற முடிவு செய்து, கிரயத்தொகையை வாதி மற்றும் பிரதிவாதிகள் சரிசமமாக கொடுத்து முதல் பிரதிவாதியின் பெயரில் 19.5.1980 ல் பதிவு செய்யப்பட்ட கிரயப்பத்திரம் மூலம் கிரயம் பெற்றனர். ஒவ்வொரு தரப்பினருக்கும் 1/4 பாகம் சரிசமமாக மேற்படி கிரயம் பெற்ற சொத்தில் கிடைக்கத்தக்கது. டவுன் சர்வே பீல்டு ரிஜிஸ்டரில் வாதி மற்றும் பிரதிவாதிகள் பெயரில் பதிவு செய்யப்பட்டது. 2006 ல் மேற்படி கிரயம் பெற்ற சொத்தின் வாயிலாக சென்டிரல் பாங்க் ஆப் இந்தியாவில் அனைவரும் சேர்ந்து கடன் பெற்றனர். ஆக வாதியும், பிரதிவாதிகளும் மேற்படி சொத்தின் கூட்டு அனுபவத்திலும் சுவாதீனத்திலும் எவ்வித

WEB COPY

பாகப்பிரிவினையும் இல்லாமல் இருந்து வந்தனர். மேற்படி சொத்தில் கட்டிடம் கட்ட முடிவு செய்து அதற்கான ஒப்பந்தமும் 23.5.1980 ல் வாதிக்கும், பிரதிவாதிகளுக்குமிடையே ஏற்படுத்தப்பட்டது. முதல் பிரதிவாதி மேற்படி தாவா சொத்தில் தென் மேற்கில் 1981 ல் வீடு கட்டினார். 2-ம் பிரதிவாதி தாவா சொத்தின் தென் கிழக்கு பகுதியில் 1988 ல் வீடு கட்டினார். வாதி தாவா சொத்தின் வடமேற்கு பகுதியில் 1996 ல் குடியிருப்பிற்கான கட்டிடம் கட்டினார். 3-வது பிரதிவாதி 1999 ல் தாவா சொத்தின் வடகிழக்கு பகுதியில் வீடு கட்டினார். ஒவ்வொரு கட்டிடமும் சம்மந்தப்பட்ட துறையினரிடம் முறையான அனுமதி பெற்ற பின்னர் கட்டப்பட்டது. அதன்படி வாதிகளும் பிரதிவாதிகளும் அவரவர்களுக்குரிய பகுதியின் கட்டிடத்தின் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இருந்து வந்தனர். தாவா சொத்தில் எஞ்சியுள்ள 42 சென்ட் இடமானது பிரிபடாத கூட்டு அனுபோகத்தில் இருந்து வந்தது. அவரவர்களுக்குரிய இடத்திற்கு வரி விதிக்கப்பட்டு, மின் இணைப்பும் அவரவர்களது பெயரில் பெறப்பட்டது. வாதியும் பிரதிவாதிகளும் அவரவர்களது வீடு அல்லாத மற்ற பிரிபடாத சொத்தில் 1/4 பாகத்தின் கூட்டு அனுபோகத்திலும் சுவாதீனத்திலும் இருந்துவந்தனர். வாதி பலமுறை தாவா சொத்தில் பாகப்பிரிவினை ஏற்பட முயற்சித்தும் முதல் பிரதிவாதி அதனை காலம் தாழ்த்தி வந்ததால் பாகப்பிரிவினை ஏற்படுத்தப்படவில்லை. வாதிதாவா சொத்தில் கட்டியுள்ள வீட்டினை அனுபவித்து வந்தாலும் தாவா சொத்தின் பிரிபடாத பாகத்தினை அவர் அடையவோ விற்பனை, செய்யவோ அதில் கடன்வசதி பெறவோ வாதியால்

WEB COPY

இயலவில்லை. வாதியும் மூன்றாம் பிரதிவாதியும் அவரவர்களுக்குரிய பகுதியின் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இருந்து வந்துள்ள நிலையில் அவர்களுக்குரிய இடத்தின் பாதை ஏற்படுத்த அவசியமுள்ளநிலையில் 1-ம் பிரதிவாதியின் செய்கையால் வாதிக்கு தாவா சொத்தில் அடிப்படை வசதி கூட பெறமுடியாத நிலை ஏற்பட்டது. எனவே தாவா சொத்தில் பிரிபடாத இடமான 42 சென்ட் நான்கு சமபாகங்களாக பிரிக்கப்பட்டு அதில் வாதிக்கும் 3-ம் பிரதிவாதிக்கும் அவர்களுடைய இடத்திற்கான பாதைவிடப்பட்டும் பிரதிவாதிகள் 1 மற்றும் 2 அவர்களுடைய பகுதியில் உள்ள இடத்தினை அனுபவித்துக் கொள்ள வேண்டும். இந்நிலையில் 5.5.2011 முதல் பிரதிவாதி கூடுதலாக கட்டிடம் கட்டவும், தாவா சொத்தின் காலி இடத்தில் உள்ள வாதியின் சுவாதீனத்தில் உள்ள இடத்தினை ஆக்கிரமிப்பு செய்யவும் முயற்சித்தார். வாதி அதற்கு ஆட்சேபனை செய்த போதிலும் முதல் பிரதிவாதி அதில் கட்டிடம் கட்ட மேற்கொண்டு முயற்சித்ததால் வாதி காவல் நிலையத்தில் 6.5.2011 அன்று புகார் கொடுத்தார். ஆனால் சிவில் வழக்கு என்பதால் காவல் நிலையத்தில் நீதிமன்றத்தை அணுகும்படி கேட்டுக்கொண்டனர். பின்னர் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கிடையே பாகப்பிரிவினை சம்பந்தமாக பேச்சு வார்த்தை நடந்த போதும் முதல் பிரதிவாதி பாகப்பிரிவினை ஏற்படுத்தாமல் மீண்டும் அத்துமீறி நுழைய முற்பட்டார். பின்னர் ஆணையர், ஆலந்தூர் நகராட்சியின் நடவடிக்கையின் பேரில் முதல் பிரதிவாதியின் சட்டபுறம்பான நடவடிக்கை கைவிடப்பட்டது. முதல் பிரதிவாதி

WEB COPY

பணபலம், ஆள்பலம் கொண்டவர் என்பதால் மீண்டும் வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ள இடத்தில் அத்துமீறி பிரவேசிக்க முயற்சிக்கலாம் என்பதால் வாதி இந்த தாவாவை பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளார்.

3. பிரதிவாதிகளின் எதிர் வழக்குரையில் கூறியுள்ள விவரங்களின் சுருக்கம் பின்வருமாறு:-

தாவாவில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் மறுக்கப்படுகிறது. 1-ம் பிரதிவாதியால் சொத்து வாங்கப்பட்டிருந்தாலும் முதல் பிரதிவாதி, மற்ற பிரதிவாதிகள், மற்றும் வாதி ஆகியோர் வாய்மொழியாக கிராம பெரியவர்கள் முன்பாக ஏற்பட்ட வாய்மொழி குடும்ப ஏற்பாட்டின்படி தாவா சொத்து உள்ள பழைய சர்வே எண் 14/10 ல் உள்ள 42 சென்ட் இடத்தினை நான்கு பகுதிகளாக பாகம் பிரித்துக்கொண்டனர். பின்னர் 23.5.1980 அன்று மேற்படி குடும்ப ஏற்பாடானது வாதி மற்றும் பிரதிவாதிகளின் சாட்சிகள் முன்பாக பத்திரமாகவும் அவரவர்களுக்குரிய பாகங்கள் குறிப்பிடப்பட்டு எழுதப்பட்டு அவை " ஏ, பி, சி, டி." இனங்களாக குறியீடு செய்யப்பட்டது. மேற்படி அவரவர்களுக்குரிய பாகங்களிலிருந்து வேம்புலிஅம்மன் கோயில் தெருவிற்கு செல்வதற்கு வசதியாக மேற்படி சொத்தின் நடுவில் 20' பொது வழிப்பாதையும் விடப்பட்டது. மேற்படி குடும்ப ஏற்பாட்டின் வாயிலாக அவரவர்களுக்குரிய பாகத்தினை அவரவர்கள் சௌகர்யம் போல் அதன் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இருந்து வருகின்றனர். வாதியும், பிரதிவாதிகளும் வீடுகளையும் தங்கள் பாகத்தில் அமைத்தனர். வாதி

WEB COPY

17.9.1981 அன்று தனது பாகத்திலிருந்து 480 சதுரடி உள்ள இடத்தினை முதல் பிரதிவாதிக்கு சாட்சிகள் முன்னிலையில் தானமாக கொடுத்தார். 1988 ல் சர்வே எண் 14/10 ல் தாவா சொத்தில் தனது பாகத்தில் உள்ள சொத்தின் உரிமையாளர் என்ற முறையில் முதல் பிரதிவாதி தனது பாகத்திற்கான சொத்தினை உபயோகப்படுத்தி வங்கியில் கடன் பெறுவதற்காக அதற்கான உறுதிமொழி ஆவணமும் எழுதி கொடுத்தார். மேற்படி ஆவணத்தினை 2, 3 பிரதிவாதிகளும் வாதியும் அத்தாட்சி செய்துள்ளனர். தாவா சொத்தில் உள்ள அவரவர் பாகத்தின் தொடர்ச்சியான அனுபவத்திலும் சுவாதீனத்திலும் வாதியும் பிரதிவாதிகளும் உள்ள நிலையில் தாவா சொத்திற்காக சொத்துவரியும் விதிக்கப்பட்டு அவரவர்கள் பாகத்திற்கான 16.11.1990 தேதியிட்ட தனி டவுன் சர்வே ரிஜிஸ்டர் படிவம் (extract) வழங்கப்பட்டது. அதன்படி புதிய சர்வே எண்களாக டி.எஸ்.எண்கள் 11/1, 11/2, 11/3, 11/4 மற்றும் 11/5 ஆகியன அளிக்கப்பட்டது. முதல் பிரதிவாதிக்கு டி.எஸ் எண்11/1-ம், 2-ம் பிரதிவாதிக்கு டி.எஸ்.எண் 11/2-ம், 3-ம் பிரதிவாதிக்கு டி.எஸ்.எண்.11/4 -ம், வாதிக்கு டி.எஸ்.நெ.11/3 -ம் ஆக அவரவர்களது பாகத்திற்காக வழங்கப்பட்டது. பொது வழிக்கு டி.எஸ்.நெ.11/5 வழங்கப்பட்டு அது வாதி மற்றும் பிரதிவாதிகளின் பெயர்களில் பொதுவாக வழங்கப்பட்டது. வாதி மேற்படி உண்மை சங்கதிகளை மறைத்து மேற்படி சர்வே எண்களில் பாகப்பிரிவினையையும் பொது வழியில் உட்பிரிவும் கோரி டி.எஸ் எண் 11/5 ல் உள்ள 42 சென்ட் இடத்திற்கும் சேர்த்தது இந்த தாவாவை தவறான சங்கதிகளுடன்

WEB COPY

தாக்கல் செய்துள்ளார். தாவா சரியாக மதீப்பீடு செய்யப்படவில்லை. தாவாவிற்கு எழுமூலம் இல்லை. தாவாவிற்கான எந்தவித முகாந்திரமும் இல்லாததால் இந்த தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4.மேற்கூறிய வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவைகளை பரிசீலித்து இந்த வழக்கில் கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.

1.தாவாவிற்கான எழுமூலம் இல்லை என பிரதிவாதிகள் கூறுவது சரியானதா?

2. பிரதிவாதிகள் கூறுவது போல் 23.5.1980 தேதியிட்ட குடும்ப ஏற்பாடு உண்மையானதா?

WEB COPY

3. வாதி, பிரதிவாதிகள் பெயரில் எழுதிக்கொடுத்த 17.9.1981 தேதியிட்டதானப்பத்திரம் உண்மையானதா?

4. வாதி கோரியபடி தாவா சொத்தினை 4 சரி பாகங்களாக பிரித்து அதில் ஒரு பாகம் வாதிக்கு வழங்கிடக் கோரியும் அதனுடன் வாதிக்கும் , 3-ம் பிரதிவாதிக்கும் மட்டும் பாதை அமைத்தும் அந்த பாததையில் வாதிக்கு 50% உரிமை கிடைக்கத்தக்க வகையில் பிரிக்கக் கோரிய முதல் நிலை தீர்ப்பாணை பெறத் தகுதிபடைத்தவரா?

5.வேறு என்ன பரிகாரங்கள்?

<u>மாறுதல் செய்யப்பட்ட எழுவினாக்கள்</u>

1. வாதி கோரியபடி தாவா சொத்தினை 4 சரி பாகங்களாக பிரித்து அதில் ஒரு பாகம் வாதிக்கு வழங்கிடக் கோரியும் அதனுடன் வாதிக்கும் , 3-ம் பிரதிவாதிக்கும் மட்டும் பாதை அமைத்தும் அந்த பாததையில் வாதிக்கு 50% உரிமை கிடைக்கத்தக்க வகையில் பிரிக்கக் கோரிய முதல் நிலை தீர்ப்பாணை பெறத் தகுதிபடைத்தவரா?

2. வேறு என்ன பரிகாரங்கள்?

5. இந்த வழக்கில் வாதி தரப்பில் வா.சா.1 ஆக வாதி விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.ஆ.1 முதல் 8 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் , முதல் பிரதிவாதி பி.சா.1 ஆகவும், 2-ம் பிரதிவாதி பி.சா.2 ஆகவும் 3-ம் பிரதிவாதி பி.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர். பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.24 வரையான ஆவணங்கள் பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டன.

6. **மாறுதல் செய்யப்பட்ட எழுவினாக்கள் 1 மற்றும் 2**

WEB COPY

இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இந்த வழக்கை வாதி தாவா சொத்தினை நான்கு சரிசம பாகங்களாக பிரித்து அதில் வாதியும், 3-ம் பிரதிவாதியும் மட்டும் உபயோகப்படுத்தும் வகையில் தேவையான பாதை அமைக்கப்பட்டும், அந்த பகுதி வாதிக்கும் மற்றும் 3-ம் பிரதிவாதிக்கும் கிடைக்கின்ற வகையில் பிரிக்கப்பட்டும், அவ்வாறு தாவா சொத்து பிரிக்கப்பட்ட பகுதியில் ஒரு பாகமும் மற்றும் வாதிக்கும் 3-ம் பிரதிவாதிக்காக மட்டும் உபயோகப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்ட பாதையில் வாதிக்கு 50% உரிமையும் கிடைக்கத்தக்க வகையிலும் பிரிக்கப்படவேண்டும் என பாகப்பிரிவினை கோரி வாதி தாக்கல் செய்துள்ளார்.

7. வாதி தரப்பு வழக்கு யாதெனில் பிரதிவாதிகள் வாதியின் சகோதரர்கள். வாதியும் பிரதிவாதிகளும் சர்வே எண் 14/10 புது சர்வே எண்11/5 ஆலந்தூர் கிராமம் சைதாப்பேட்டை தாலுக்காவில் உள்ள 42 செண்ட் விஸ்தீரணம்

கொண்ட இடமான தாவா சொத்தினை பாலகிருஷ்ண ரெட்டியார் மற்றும் மற்றவர்களிடமிருந்து முதல் பிரதிவாதியின் பெயரில் மேற்படி கிரயத்திற்காக அனைவரும் சரிசமமாக கிரயதொகை கொடுத்து 19.5.1980ல் கிரயம் பெற்றனர். எனவே மேற்படிதாவா சொத்தில் உள்ள 42 சென்ட் இடம் அனைவருக்கும் நான்கில் ஒரு பாகம் உரிமையுடையது. அதன் கூட்டு அனுபவத்தில் வாதியும் பிரதிவாதிகளும் எந்தவித பாகப்பிரிவினையும் ஏற்படுத்தாமல் இருந்து வந்தனர். 23.5.1980ல் ஏற்பட்ட ஒப்பந்தப்படி தாவா சொத்து பாகம் பிரிக்கப்படாமல் அவரவர்கள் ஒரு பகுதியில் வீடு கட்டிக்கொண்டு அவரவரது பகுதியில் உள்ள வீட்டின் அனுபவத்திலும் சாவதீனத்திலும் இருந்து வந்தனர். வீடு கட்டியுள்ளதுபோக எஞ்சியுள்ள 42 சென்ட் இடமான தாவா சொத்தானது பிரிக்கப்படாமல் பொதுவான அனுபவத்தில் இருந்து வந்தது. 5.5.2011 அன்று முதல் பிரதிவாதி மேற்படி பிரிபடாத தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து கூடுதலாக கட்டிடம் கட்ட முயற்சி செய்தார். எனவே வாதி இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார்.

WEB COPY

8. பிரதிவாதி தரப்பு வழக்கு யாதெனில் தாவா சொத்தான 42 சென்ட் இடமானது குடும்ப ஏற்பாட்டின் படி ஊர் பெரியவர்கள் முன்பு நான்கு பாகங்களாக பிரிக்கப்பட்டு பாகப்பிரிவினை பத்திரமும் எழுதப்பட்டது. அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட குடும்ப ஏற்பாட்டின்படி அவரவர்களுக்குரிய பாகத்தில் வீடு கட்டி அனுபவத்து வருகின்றனர். வாதி தனது பாகத்தில் இருந்து 480 சதுரடி

இடத்தினை 17.9.1981 தேதியிட்ட தான பத்திரம் மூலம் முதல் பிரதிவாதிக்கு தானமாக கொடுத்துள்ளார். ஆலந்தூர் நகராட்சியால் அவரவர்களுக்குரிய பாகத்திற்கான இடத்திற்கு சொத்து வரி விதிக்கப்பட்டு டவுன் சர்வே ரிஜிஸ்டர் எக்ஸ்டிராக்டும் தனியாக வழங்கப்பட்டு அதன்படி புது டவுன் சர்வே எண்களும் அவரவர்களுக்கு தனித்தனியாக ஒதுக்கப்பட்டுவிட்டது. வாதி உண்மை சங்கதிகளை மறைத்து இநத் தாவாவை தாக்கல் செய்துள்ளார். தாவாவிற்கு எழுமூலம் இல்லை. வாதி கோரும் பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல. எனவே தாவா தள்ளுபடிசெய்யப்படவேண்டும்.

WEB COPY

9. வாதிதரப்பில் வா.சா.ஆ. 1 முதல் 8 சான்றாவணங்களும் பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.ஆ.1 முதல் 24 சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டன. வாதி மற்றும் பிரதிவாதிகள் மூவரும் சகோதரர்கள். உறவுமுறை, வாதி, பிரதிவாதிகள் அனைவரும் சேர்ந்து தாவா சொத்தினை கிரயம் பெற்றது ஆகிய விவரங்கள் இருதரப்பிலும் மறுக்கப்படவில்லை. மாறாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. தாவா சொத்தில் அடங்கிய நான்கு பகுதிகளில் வாதியும், மூன்று பிரதிவாதிகளும் அவரவர் செலவில் கட்டுமானம் அமைத்து வசித்து வருவதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. தாவா சொத்தின் முன் பகுதியில் 1, 2 பிரதிவாதிகள் வீடு கட்டி வசிக்கின்றனர். அதேபோன்று, தாவா சொத்தின் பின் பகுதியில் வாதியும், வாதியின் மற்றொரு சகோதரரான 3-வது பிரதிவாதியும் வீடு கட்டி வசிக்கின்றனர். வாதி மற்றும் 3-வது பிரதிவாதியும் தற்போது 1 மற்றும் 2-வது

பிரதிவாதிகளின் வீடுகளுக்கு நடுவில் அமைந்துள்ள பாதையைப் பயன்படுத்தி வருகின்றனா் என்பதும் இப்பாதை நீங்கலாக வேறு பாதை/வழி ஏதும் இல்லை என்பதும் வழக்காவணங்களின் பரிசீலனையின் அடிப்படையில் தெரிய வருகிறது. வாதி தனக்கும் 3-வது பிரதிவாதிக்கும் மட்டும் பயன்படும் வகையில் பாதை பிரிக்கப்பட்டு அவ்வாறு பிரிக்கப்பட்ட பாதையில் வாதிக்கு 50% உரிமை கிடைக்கத்தக்க வகையில் பாகம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் வாதி தன்னை ஒரு சாட்சியாக விசாரித்துக் கொண்டாா். தாவா சொத்து முதல் பிரதிவாதி பெயரில் கிரயம் பெறப்பட்ட கிரயப் பத்திரம் வா.சா.ஆ.1 ஆகும். வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கிடையே ஏற்பட்ட குடும்ப பாகப்பிரிவினை ஒப்பந்தம் வா.சா.ஆ.2 ஆகவும், 28.9.1995 ல் சென்னை பெருநகர வளா்ச்சி குழுமத்தில் வழங்கப்பட்ட கட்டிட அனுமதி வா.சா.ஆ.3. ஆகவும், வாதி வசிக்கின்ற வீட்டிற்கான சொத்து வரி ரசீதுகள் வா.சா.4 ஆகவும், முதல் பிரதிவாதி வங்கிக்கு அனுப்பிய குறிப்பாணை வா.சா.5 ஆகவும், சொத்துதொடா்பான வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ.6 ஆகவும், வாதியின் வழக்கறிஞரால் அனுப்பப்பட்ட வழக்கறிஞா் அறிவிப்பு நகல் வா.சா.ஆ.7 ஆகவும், அதனை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.8 ஆகவும் வாதிதரப்பில் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது.

10. வாதிகள், பிரதிவாதிகள் இருதரப்பினருமே ஆரம்பத்தில் கூட்டு

WEB COPY

குடும்பமாக வசித்து அவ்வாறு வசித்து வந்த நிலையில் கிரயத்தொகையை நால்வரும் சரிசமமாக ஒன்று சேர்த்து செலுத்தி தாவா சொத்தினை வா.சா.ஆ.1 மூலமாக கிரயம் பெற்றிருக்கிறார்கள். வா.சா.ஆ.1 -ம், பி.சா.ஆ.1 -ம் ஒன்றேதான். சென்டிரல் பாங்க் ஆப் இந்தியா வழங்கிய ஒப்புதல் கடிதம் பி.சா.ஆ.2. ஆவணம் முதல் பிரதிவாதியின் பெயரில் உள்ள நகர நில அளவை பதிவேடு நகல் பி.சா.ஆ.3 ஆகும். பி.சா.ஆ.4. நகர நில அளவை பதிவேட்டில் வாதி பிரதிவாதிகள் பெயரில் கூட்டாக பொது வழி குறிப்பிடப்பட்டுள்ளது. பி.சா.ஆ.6 முதல் பி.சா.ஆ.8 மின் கட்டண ரசீதுகள், மின் கட்டண வெள்ளை அட்டைகள் மற்றும் சொத்து வரி ரசீதுகள் ஆகியவையாகும். வாதி, வங்கி மற்றும் முதல் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்த நீதி பேராணை மனுவின் பிரமாண வாக்குமூலம் பி.சா.ஆ.9, பி.சா.ஆ.10 முதல் பி.சா.ஆ.16 இரண்டாம் பிரதிவாதியின் பெயரில் உள்ள ஆவணங்களாகும். பி.சா.ஆ.17 முதல் பி.சா.ஆ.23 வரையிலான ஆவணங்கள் மூன்றாம் பிரதிவாதியின் பெயரில் உள்ளது. பி.சா.ஆ.24 அடமானப் பத்திரமாகும்.

WEB COPY

11. தாவா சொத்து பாகம் பிரிக்கப்படவில்லை. வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் நான்கு தனித்தனி பகுதிகளில் ஒவ்வொருவருக்கும் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டு அவரவர்களுக்குரிய பகுதியில் வசித்து வருகின்றனர். ஆனால், சொத்திற்கான பாகப்பிரிவினை இது வரை ஏற்படவில்லை என்பதே வாதிதரப்பின் நிலைப்பாடாகும். ஆனால் இதற்கு

மாறுபட்டு பிரதிவாதிகள் தரப்பில் கூர்சீட்டின் அடிப்படையில் தாவா சொத்து பாகம் பிரிக்கப்பட்டுவிட்டது. பிரிக்கப்பட்ட பகுதியில் தரப்பினர்கள் வசித்து வருகின்றனர். அவரவர்களுக்குரிய பாதையும் ஏற்கனவே பிரிவுபடுத்தப்பட்டுவிட்டது. எனவே புதிதாக பாகப்பிரிவினை ஏற்படுத்த அவசியம் இல்லை என்பது பிரதிவாதிகள் தரப்பு நிலைப்பாடாகும். வா.சா.1. ஆக விசாரிக்கப்பட்ட வாதியின் பிரமாண வாக்குமூலத்தில் வழக்குரை விவரங்களை குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டு முதல் விசாரணையாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. வா.சா.1-ன் குறுக்கு விசாரணையில்

WEB COPY

> "…. தாவா சொத்திற்கு பழைய சர்வே நெம்பர் 14/10 என்றால் சரிதான். அதற்காக புதிய நகர அளவை எண் 11/1, 11/2, 11/3, 11/4 மற்றும் 11/5 என்றாலும், அதில் 11/5 பாதைக்குரியது என்றாலும் சரியல்ல. அப்படி ஒரு நெம்பர் இல்லை 14/10 மட்டும் தான் சரி. 4 வீடுகளுக்கும் தனித்தனியாக வீட்டு வரி ரசீது உண்டு என்றால் சரிதான். 4 வீடுகளுக்குமான சொத்து வரியை அவரவர்கள் தனித்தனியாக கட்டுகிறோம் என்றால் சரிதான். 4 பேருக்கும் அவரவர்களுக்கு தனித்தனியாக மின்சார கட்டணம் கட்டி வருகிறோம் என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன் தாவா சொத்து நகர அளவுகள் படி எத்தனை உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது என்பதை நகராட்சி அலுவலகத்தில் மனு எதுவும் தாக்கல் செய்து பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. எனது பிராதில் சொத்து விவரத்தில் பழைய சர்வே நெம்பர் 14/10 என்றும், புதிய நகர அளவை எண் 11 பகுதி என்றும் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரிதான். ”

என்று குறிப்பிட்டுள்ளார். வா.சா.ஆ.1, பி.சா.ஆ.1 ஆகிய இரண்டும் ஒரே ஆவணம். வா.சா.ஆ.1 ஆவணம் முதல் பிரதிவாதி பெயரில் கிரயம் பெறப்பட்டிருக்கிறது. வா.சா.ஆ.2 ஆவணம் பதிவு செய்யப்படாத குடும்ப பாகப்பிரிவினை ஒப்பந்தம் ஆகும். இதில்

" 1980-ம் வருஷம் மே மாதம் 19-ம் தேதியன்று ஆலந்தூர் கிராமம், சர்வே நெம்பர் 14/10 ; விஸ்தீரணம் 42 செண்டு கொண்ட நிலத்தை 1-வது நபர் திரு.ஜி.பூங்காவனம் பெயரில் நாங்கள் நால்வரும் பணம் போட்டு நிலம் வாங்கப்பட்டது. மேற்கண்ட சொத்தில் பிற்காலத்தில் எவ்வித தகராறும் வரக்கூடாது என்பதற்காக எங்களுக்குள் உடன்படிக்கை ஏற்படுத்தி, அதன்படி இந்த நிலத்தை பாகப்பிரிவினை அக்ரிமெண்டு செய்து கொள்கிறோம்.

1-வது நபர் திரு.ஜி.பூங்காவணம் படத்தில் காட்டியிருக்கும் ' A' பாகத்தை அனுபவித்துக்கொள்ள வேண்டியது.

2-வது நபர் திரு.ஜி.ராமானுஜம் படத்தில் காட்டியிருக்கும் ' பி' பாகத்தை அனுபவித்துக்கொள்ள வேண்டியது.

மூன்றாவது நபர் திரு.ஜி.ஆதிமூலம் படத்தில் காட்டியிருக்கும் ' **சி** ' பாகத்தை அனுபவித்துக் கொள்ள வேண்டியது.

4-வது நபர் திரு.ஜி.மாதவன் படத்தில் காட்டியிருக்கும் ' டி ' பாகத்தை அனுபவித்துக்கொள்ள வேண்டியது.

WEB COPY

என்று குறிப்பிடப்பட்டு ஒரு வரைபடமும் வரையப்பட்டிருக்கிறது. வா.சா.ஆ.2 பதிவு செய்யப்படாத ஆவணமாகும். வா.சா.ஆ.3 ஆவணம் கட்டிட வரைபட அனுமதியாகும். இதில் வாதியின் கையொப்பம் உள்ளது. வா.சா.ஆ.5 ஆவணம் முதல் பிரதிவாதிக்கும், வங்கிக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட ஆவணமாகும். இதில் முதல் பிரதிவாதி 1 முதல் 13 ஆவணங்களை வைப்பீடாக வங்கியில் வைத்திருக்கிறார். இதில் 5-வது ஆவணமாக வா.சா.ஆ.2 குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 1980 -ம் ஆண்டு எழுதப்பட்டிருந்தாலும் கூட 2012 -ம் ஆண்டு வரை நடைமுறைக்கு வந்ததற்காக ஆதாரங்கள் ஏதும் இருதரப்பிலும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் வா.சா.ஆ.5 ஆவணத்தில் ஏ அட்டவணையில் 1

முதல் 13 ஆவணங்கள் விவரமும், '**பி**' அட்டவணையில் தாவா சொத்து விவரமும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வா.சா.ஆ.5 ஆவணத்தில் ' பி ' அட்டவணையாக குறிப்பிடப்பட்டுள்ள தாவா சொத்து விவரத்தில் 42 செண்ட் என்று மொத்த விஸ்தீரணமும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

12. முதல் பிரதிவாதி பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டிருக்கிறார். அவருடைய சாட்சியத்தில் கிரயம் சொத்து கிரயம் வாங்கப்பட்டு தனித்தனியாக பாகம் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாகத்திற்கும் அதில் உள்ள வீட்டிற்கும் தனித்தனியே அவர் அவர் பெயரில் சொத்து வரி விதித்து தனித்தனியாக நகர நில அளவை பதிவேடு செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிட்டு தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டியிருக்கிறார். அவரது குறுக்கு விசாரணையின் போது

WEB COPY

"பி.சா.ஆ.1 ஆவணம் மூலமாக 14/10 என்கிற சர்வே நம்பரில் 42 செண்ட் நிலம் என் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான்."

"…. பி.சா.ஆ.2 ஆவணத்தின் படி 26.08.2015ல் 14/10 என்கிற சர்வே நம்பர் தொடர்பான நிலம் மற்றும் அது தொடர்பான ஆவணங்களை கடனுக்கான செக்யூரிட்டியாக வங்கியில் வாங்கி வைத்திருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால் சரிதான். "

"… பி.சா.ஆ.4 ஆவணத்தில் காலி மனை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். பி.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள நடைமுறைகள் மற்றும் வரைபட அனுமதி ஆகியவை இரண்டிலும் சர்வே எண் 14/10 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். "

"… 2012ம் ஆண்டு இந்த வழக்கு நிலுவையில் இருந்த போது வங்கியில் அடமான

கடன் பெறுவதற்காக அடமானம் வைத்தேன் என்றால் சரிதான். 28.06.2012 தேதியிட்ட அடமான பத்திரம் பதிவு செய்யப்பட்டு பத்திரங்கள் வங்கியில் வைக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த பதிவு செய்யப்பட்ட அடமான பத்திரத்தில் சர்வே நம்பர் 14/10ல் 42 சென்ட் நிலம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான்... ”

“... 42 சென்ட் சொத்திற்கு மொத்தமாக நான்கு புறங்களில் காம்பவுண்ட் சுவர் உள்ளது. ”

“ நானும், இரண்டாவது பிரதிவாதியும் தாவா சொத்தின் முன் பகுதியில் சாலையை ஒட்டிய இடத்தில் இருக்கிறோம் என்றால் சரிதான்.”

“வா.சா.ஆ.2 ஆவணத்தில் வாய்மொழியாக ஏற்கனவே பிரித்து கொண்டோம் என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.”

“ முதல் பிரதிவாதியாகிய நானும், 2வது பிரதிவாதியும் ரோட்டை ஒட்டியவாறு வீடு இருப்பதால் அதன் மார்க்கெட் மதிப்பு வாதி மற்றும் 3ம் பிரதிவாதியின் வீட்டு மதிப்பை விட அதிகாமாக இருக்கும் என்றால் எல்லாம் ஒன்றாக தான் இருக்கும். வாதியும் 3ம் பிரதிவாதியும் இருக்கும் வீட்டு மதிப்பு எங்கள் வீட்டு மதிப்பில் பாதி கூட வராது என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் வாதிக்கும் 3ம் பிரதிவாதிக்கும் அவர்கள் இருவருக்கும் மட்டுமே உரிமையுடைய வழி அவசியம் என்றால் சரியல்ல. ...”

WEB COPY

என்று குறிப்பிட்டிருக்கிறார். 2-வது பிரதிவாதி பி.சா.2 ஆகவும், மூன்றாவது பிரதிவாதி பி.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டிருக்கின்றனர். பி.சா.1 குறிப்பிட்ட விவரங்களையே பி.சா.2-ம், பி.சா.3 -ம் அவர்களது சாட்சியத்தில் குறிப்பிட்டிருக்கின்றனர். பி.சா.1, 2, 3 ஆகிய மூன்று சாட்சிகளும் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 4 ல் வாதி 480 சதுரடி நிலத்தினை முதல் பிரதிவாதிக்கு தானமாக வழங்கிவிட்டார் என்று குறிப்பிட்டுள்ளார்கள். முதல் பிரதிவாதி அவரது பிரமாண வாக்குமூல சாட்சியத்தில்

".... 17.9.1981 அன்று அதே தேதியிட்டு ஒரு தானபத்திரம் முன்னிலைக்கு இந்த வழக்கின் வாதியானவர் அவர் பங்கிற்கு ஒதுக்கப்பட்ட

> நிலத்திலிருந்து சுமார் 480 சதுரடி நிலத்தினை உரிய சாட்சிகள் முன்னிலையில் எனக்கு தானமாக அளித்துவிட்டார்... "

என்று குறிப்பிட்டிருக்கின்றனர். ஆனால் வாதி தானமாக முதல் பிரதிவாதிக்கு 480 சதுர அடி நிலத்தினை வழங்கினார் என்பதற்கு எத்தகைய ஆவண ஆதாரங்களும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

13. வாதிகள் தரப்பில் கீழ்கண்ட முன் தீர்ப்புகள் தாக்கல் செய்யப்பட்டன.

வருவாய்த்துறை/நகராட்சி ஆவண பதிவுகளை அடிப்படையாக வைத்து இவ்வழக்கினை தீர்மானிக்ககூடாது என

WEB COPY

1. 1996 (11) SCC 164:

" Held: First Appellate Court committed serious error in taking a view contrary to that of trial court. Merely on the basis of some municipal entry ignoring material facts and evidences – The Judgment and Decree passed by the First Appellate Court and the High Court are set aside and the Judgment and Decree passed by the trial court is restored."

தாவா சொத்தில் தரப்பினர்கள் தனித்தனியே சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் இருந்தாலும் கூட்டுக்குடும்பமாக இருந்தார்கள் என்பதற்கு வலுவான அனுமானம் இருக்குமேயானால் குடும்ப நலன் கருதி நிலத்தை மறு ஒப்படைவு செய்யலாம் என்பதாக

2. AIR 2005 (KAR) 393 :

" No averment in the Written statement as to who were panchayatdars

and as to whether Panchayat took place and whether there was any palu patti or joint wardi prepared at time of alleged Panchayat and oral Partition – Entries made in record of rights would not prove partition by metes and bounds - Mere fact that parties have been in separate possession and enjoyment of properties belonging to family – would not by itself lead to inference of partition by metes and bounds – there is strong presumption in favour of jointness of family – Re-grant of land in favour of any members of joint family would ensure to benefit of family. "

வரி செலுத்துவது மட்டுமே தீர்மானிக்க போதுமானதல்ல என்பதாக

WEB COPY

3.AIR 1986 (ORI) 173

"(E) Hindu Law – Partition – Evidnece – Mere separate payment of Gram Panchayat tax by members does not conclusively establish severance of joint status. "

தரப்பினர்கள் வசதியின் அடிப்படையில், எல்லைகள் அளவுகள் வரையறை செய்யாத நிலையில் பாகப்பிரிவினை ஏற்பட்டதாக தீர்மானிக்க இயலாது என

4.AIR 2007 ALLAHABAD 198:

"Hindu Law – Joint family property – Suit for Partition – Parties in occupation of property on basis of their convenience – Partition by way of convenience of possession of certain portion of property by itself would not come in way of decree of partitin, especially, where proprty has not been divided by metes and bounds – Assuming that there was family or

private arrangement on basis of which parties were occupying their shares or portions of house in question by way of mutual convenience – will not amount to partition by metes and bounds between parties. "

5.AIR 1992 CALCUTTA 222:

"(B) Hindu Law – Partition – Proof – Burden is on party who asserts partition – Contradictory pleas that there was partition by amicable settlement and partition by appointing arbitrators – No document relating to amicable partition produced – Held, existence of previous partition was not proved – Fact that other co-sharer was in exclusive possession of some joint properties – Not determinative of partition as his exclusive possession can be by virtue of amicable arrangement".

WEB COPY

6.AIR 1992 BOMBAY 72:

"D. Joint family – Partition – Mutation entry recording names of heirs of deceased Khatedar and setting out shares in which various lands were being cultivated by sons only – Entry cannot be said to record any partition effected between sons – At highest it record family arrangement.

7.2014 – 6- MLJ – 674:

"Respondents miserably failed to establish oral partition in 1959 by evidence – Lower appellate court wrongly held that there was oral partition in 1959 and that suit property allotted to 1st respondent – Judgment of the Lower appellate court set aside and that of trial court

restored – appeal allowed.

8. AIR 2007 ORISSA 15:

"(B) Mistake in description of land in respect of Khata numbers and Plot number – Boundary of land given in Sale deed should be given preference to ascertain the land actually sold."

பதிவு செய்யப்படாத மற்றும் முத்திரையிடப்படாத ஆவணம் ஏற்கத்தக்க சாட்சியம் ஆகாது. ஆனால், பங்குதாரர்களின் சுவாதீன அனுபவத்தின் முத்திரைகட்டணம் அபராதத்துடன் ஏற்கலாம் என்பதாக

WEB COPY

9. 2015(16) SCC 787

B. Registration Act, 1908 – S.17(10(b) – Unregistered and unstamped partition deed – Deed of relinquishment of right in respect of immovable property – Not admissible in evidence for primary purpose of division of joint properties by metes and bounds – But it can be relied upon for collateral purposes of severance of title and nature of possession of various shares only if it is impounded by paying stamp duty together with penalty.

பதிவு செய்யபடாத ஆவணம் குறியீடு செய்யத்தக்கதல்ல என்பதாக

10.2015 (1)LW 137

"... document having not been registered, cannot be permitted to be marked – It cannot be looked into for collateral purpose... "

11. AIR 1999 Allahabad 167

"... It was document of family arrangement and not only a memorandum of family arrangement – Requires registration for being admissible in evidence – Parties acting upon it and benefiting by it – Cannot be stopped from questioning its validity – No estoppel can be pleaded against statute."

12.AIR 1999 Mad 341

(A) Registration Act (16 of 1908) SS. 17-B, 49(c) – Document – Admissibility – Document dividing all family properties by consent and entitling each of family member to enjoy properties allotted to him – Is a partition deed and not a mere memorandum of partition – It declares an interest in immovable property mentioned therein – Document being compulsorily registrable not admissible in evidence without its registration."

WEB COPY

13.2002 (1) CTC 472

Code of Civil Procedure, 1908 Order 7, Rule 7 – Reliefs – POwer of Court to grant lesser relief – Court can give plaintiff such general or other reliefs as it deems just to same extent as if it had been asked for, provided that occasions no prejudice to other side beyond what can be compensated for in costs – Court will not refuse to grant relief not specifically claimed if such relief is required by nature of case and is not inconsistent with relief specifically claimed and raised by pleadings –

Court can mould relief according to proved facts provided such relief is not inconsistent with pleadings – Claim can not be thrown out on merits due to technicality of pleadings - Court can always grant lesser relief that what is claimed to which plaintiff is entitled -"

14. பிரதிவாதிகள் தரப்பில் கீழ்கண்ட இரு முன் தீர்ப்புகள் தாக்கல் செய்யப்பட்டது.

1.2004(4) CTC Page 143 SCC

" Code of Civil Procedure, 1908, Section 100 – Duty of Court – Suit for Partition dismissed of ground that there had been earlier partition and parties had acted upon it – Elaborate evidence reagarding separate possession and enjopyment adduced and accepted by courts below – high Court framed question of law regarding admissibility of unregistered partition deed nad decreed suit stating that it was inadmissible – HIgh Court did not set aside concurrent findings of courts below holding that earlier partition had been effected and parties had been separately enjoying properties – Judgment of High Court set asie as there was no discussion on such findings . "

2.2016(2) MWN (Civil) 588

"... Suit claim was based on unregistered Partition Deed – Held. Partition Deed relied upon by plaintiff, a mere record of understanding between

WEB COPY

parties and same not requiring registration – Rejection of document that same was executed as early as 1964, erroneous – Partition Deed ought to have been considered in light of oral and documentary evidences adduced by parties – Matter remanded to Appellate Court for fresh disposal after considering veracity of Partition deed – Second Appeal allowed. "

15. தாவா சொத்து விவரத்தில் சர்வே எண் 14/10 அதற்கு இணையான டி.எஸ்.எண் 11/5 விஸ்தீரணம் 42 சென்ட் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வா.சா.ஆ.1. ஆவணத்தில் சர்வே எண் 14/10 விஸ்தீரணம் 42 சென்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று, வா.சா.ஆ.2 ஆவணத்திலும் சர்வே எண் 14/10 விஸ்தீரணம் 42 சென்ட் என்று உள்ளது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் சர்வே எண் 14/10 என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் 4392 சதுரடி என்று அளவு குறிப்பிடப்பட்டிருக்கிறது. வா.சா.ஆ.4 வாதி பெயரில் உள்ளது. ஆனால் சர்வேஎண் குறிப்பிடப்படவில்லை. வா.சா.ஆ.5 ஆவணம் மூலம் முதல் பிரதிவாதியால் 28.6.2012 அன்று தாவா சொத்து சம்பந்தப்பட்ட ஆவணம் அடமானம் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆவணத்தில் தாவா சொத்து விவரத்தில் சர்வே எண் 14/10 மொத்த விஸ்தீரணம் 42 சென்ட் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பி.சா.ஆ.24 மூன்றாவது பிரதிவாதியால் எழுதி கொடுக்கப்பட்ட அடமானக் கடன் பத்திரமாகும். இந்த பத்திரத்தில் ' **ஏ** ' அட்டவணையில் சர்வே எண் 14/10 என்றும், மொத்த விஸ்தீரணம் 42 சென்ட் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், ' பி ' அட்டவணையில் ' ஏ'

WEB COPY

அட்டவணை சொத்தில் நான்கில் ஒரு பாகம் என்று குறிப்பிடப்பட்டு பழைய சர்வே எண் 14/10 அதற்கு இணையான புது சர்வே எண் 11/1 என குறிப்பிடப்பட்டிருக்கிறது. பி.சா.ஆ.3 ல் பழைய சர்வே எண் 14/10 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சர்வே பீல்டு 11 என்றும், சப்டிவிஷன் 1 என்றும் குறிப்பிடப்பட்டு 0.0400.5 என மொத்த விஸ்தீரணமும் சதுர மீட்டரில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பி.சா.ஆ.3 தளம் வீடு என்றும், பி.சா.ஆ.4 ஆவணம் வழிபாதைக்குரியது என்று குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும்கூட பி.சா.ஆ.4 ஆவணத்தில் "காலி மனை" என்று தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பி.சா.ஆ.5 ஆவணத்தில் சர்வே எண் 14/10 மட்டுமே உள்ளது. புதிய சர்வே எண் அல்லது சப்டிவிஷன் செய்யப்பட்ட விவரமோ இல்லை. பி.சா.ஆ.5 ஆவணத்தில் முதல் பிரதிவாதி பூங்காவனம் கையொப்பமிட்டிருக்கிறார். பி.சா.ஆ.10 ஆவணம் இரண்டாவது பிரதிவாதி ராமானுஜம் பெயரில் உள்ளது. சர்வே எண் 14/10 அதற்கு இணையான டவுன் சர்வே எண் 11 என குறிப்பிடப்பட்டிருக்கிறது. பி.சா.ஆ.17 3-வது பிரதிவாதி பெயரில் அமைந்திருக்கிறது. பி.சா.ஆ.11 ல் சர்வே எண் ஏதும் காணப்படவில்லை. பி.சா.ஆ.17 நகர நில அளவை பதிவேடு ஜெராக்ஸ் நகல். சர்வே எண் 14/10 குறிப்பிடப்பட்டு அதற்கு இணையான டவுன் சர்வே எண் 11/4 என குறிப்பிடப்பட்டிருக்கிறது.

16. ஆக, வாதி மற்றும் பிரதிவாதிகள் ஒருவருக்கொருவர் சகோதரர்களாக இருந்தாலும் கூட குறிப்பிட்ட காலம் வரை கூட்டு குடும்பமாக இருந்துள்ளார்கள்.

WEB COPY

பின்னிட்டு அவர்களுக்கிடையே ஏற்பட்ட பிரச்சனை காரணமாக இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டிருப்பது தெரிய வருகிறது. வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கிடையே சுமூகமான உறவு இருந்த காலத்தில் தாவா சொத்து வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிட்டவாறு அடையாளம் காணப்பட்டு ஒருவர் பின் ஒருவராக அவர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அனுமதி பெற்று கட்டிடம் அமைத்து வாழ்ந்து வருகிறார்கள். வாதி தரப்பில் பாகப்பிரிவினை நடக்கவில்லை என்றும், பிரதிவாதிகள் தரப்பில் பாகப்பிரிவினை நடந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கான ஆதாரங்கள் இல்லை. வா.சா.ஆ.2 ஒப்பந்தமாகவே உள்ளது. வா.சா.ஆ.2 குடும்ப பாகப்பிரிவினை ஒப்பந்தம் நகல் ஆவணமாகும். அதன்மூல ஆவணம் வங்கியில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. இதே ஆவணத்தினை பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்வதற்காக மனு தாக்கல் செய்யப்பட்ட போது வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டு குறியீடு செய்யப்படவில்லை. வா.சா.ஆ.2 ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தாவாசொத்தின் முன் பகுதியில் சாலையை ஒட்டி 1 மற்றும் 2-வது பிரதிவாதிகளின் வீடு அமைந்துள்ளது. முன் பகுதியில் வேம்புலியம்மன் கோயில் தெருவில் 1 மற்றும் 2-வது பிரதிவாதிகளுக்கு தலா 49 1/2 அடி முன்பகுதியாக உள்ளது. 1, 2 பிரதிவாதிகள் வீட்டிற்கு பின் பகுதியில் வாதியும், 3-வது பிரதிவாதியும் அவரவர்கள் கட்டிய வீட்டில் வசித்து வருகிறார்கள். அவர்களுக்கான வழியாக 1

WEB COPY

மற்றும் 2 பிரதிவாதிகளின் வீடுகளுக்கு நடுவில் உள்ள 20 அடி வழி அமைந்துள்ளது. 1 மற்றும் 2-வது பிரதிவாதிகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு வேம்புலி அம்மன் கோயில் தெருவில் 49 1/2 அடி முன் பகுதி தெருவை ஒட்டியவாறு அமைந்துள்ளது. ஆனால் 2-வது பிரதிவாதியின் வீட்டின் முன்புறம் "மின்சார டிரான்ஸ்பார்மர்" அமைந்திருப்பதாக தெரிவித்தாலும்கூட எஞ்சிய பகுதியை 2-வது பிரதிவாதி வழியாக பயன்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்பு உள்ளது. ஆனால் மேற்படி வா.சா.ஆ.2 ல் குறிப்பிட்டுள்ள 1, 2 பிரதிவாதிகளின் வீடுகளுக்கு நடுவில் அமைந்துள்ள வழியைத் தவிர்த்து வேறு பாதை ஏதும் வாதி மற்றும் 3-வது பிரதிவாதிக்கு இல்லை என்பது இருதரப்பு சாட்சிய சான்றாவணங்களின் பரிசீலனையின் மூலம் தெரிய வருகிறது. பி.சா.ஆ.24 அடமான பத்திரம் இந்த வழக்கு நிலுவையில் இருந்த போது 3.7.2017 ல் உருவான ஆவணமாக இருந்தாலும் கூட, பி.சா.ஆ.24 லும் ' பி ' அட்டவணை சொத்து 'ஏ' அட்டவணை சொத்தில் நான்கில் ஒரு பாகம் என குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர எந்த ஆவணத்தின் அடிப்படையில், எப்பொழுது பாகம் பிரிக்கப்பட்டது என்ற விவரம் இல்லை. அதேபோன்று, பிரதிவாதிகள் தரப்பில் "பொதுவழிப்பாதை" என சர்வே எண் 11/5 அடங்கிய பி.சா.ஆ.4 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும் கூட பி.சா.ஆ.4 ஆவணத்தில் "காலிமனை" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர, அது வழிப்பாதை என குறிப்பிடப்படவில்லை. எனவே, மேற்குறிப்பிட்ட அனைத்து விவரங்களையும்

WEB COPY

கருத்தில் கொண்டு பார்க்கும் போது சகோதரர்களிடையே வழி உள்ளிட்ட சச்சரவுகளின் அடிப்படையிலேயே இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டிருப்பது தெரிய வருகிறது.

17. வா.சா.ஆ.2 ஆவணம் குடும்ப ஏற்பாடு என பிரதிவாதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டாலும் கூட அது ஒப்பந்தமாக இருந்து வங்கியில் கடன்பெற பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று தெரிய வருவதுடன் வாதிகள்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போது

" ... வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 2011 ம் ஆண்டில் பாகப்பிரிவினை பத்திரம் வழியுடன் தயார் செய்து அதை நான் கையொப்பமிட மறுக்கவில்லை. பத்திரம் எழுதினார்கள் ஆனால் அது முற்றுப்பெறவில்லை. "

WEB COPY

" ...... 1998 ல் நாங்கள் நால்வரும் சேர்ந்து சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா ஆலந்தூர் கிளையில் 42 சென்டு தாவா சொத்தை செக்யூரிட்டியாக வைத்து வியாபாரத்திற்காக கடன் வாங்கினோம் என்றால் சரிதான். பாகப்பிரிவினை ஆகாத காரணத்தினால்தான் 42 சென்ட்-ஐ மொத்தமாக வைத்து நாங்கள் நால்வரும் சேர்ந்து கடன் வாங்கினோம் என்றால் சரிதான்."

என்று குறிப்பிடப்பட்டிருப்பதன் மூலம் அவரவர்களுக்குரிய பகுதி ஒதுக்கப்பட்டு வாதி, பிரதிவாதிகள் அவரவர் செலவில் தனித்தனியாக வீடு கட்டி வசித்து வந்தாலும் கூட இந்த பாகப்பிரிவினை பதிவு செய்யப்பட்டு நடைமுறைக்கு வந்தது தொடர்பான நேரடியான ஆவணங்கள் இல்லை என்பது தெரியவருகிறது.

மேலும், பிரதிவாதிகள் தரப்பில், வாதி எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் தான பத்திரம் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. வா.சா.ஆ.2 பதிவு செய்யப்படவில்லை. மேலும், வா.சா.ஆ.2 ன் அசல் வங்கியில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், வா.சா.ஆ.2 நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பின் வாதி, 1 முதல் 3 பிரதிவாதிகள் என நால்வருக்கும் நான்கு பிரதிகள் உருவாக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக அந்த ஆவணம் இருந்திருக்கும். அவ்வாறு இல்லாததுடன், வா.சா.ஆ.1. வா.சா.ஆ.5, பி.சா.ஆ.24 ல் '**ஏ** ' அட்டவணை சொத்தில் நான்கில் ஒரு பாகம் என குறிப்பிட்டு ' **பி** ' அட்டவணை விவரம் குறிப்பிட்டிருப்பது பி.சா.ஆ.4 ஆவணத்தில் ' காலிமனை' என குறிப்பிடப்பட்டிருப்பது, வா.சா.ஆ.2 ஆவணம் நடைமுறைப்படுத்தப்பட்டதற்கு ஆதாரம் இல்லாதது, தாவா சொத்து முழுவதற்கும், ஒரே சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டிருப்பது பி.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் பி.சா.ஆ.2 ஆவணத்தில் சர்வே எண் 14/10 தொடர்பான நிலம் வங்கியில் அடமானம் வைக்கப்பட்டிருப்பதாகவும், பி.சா.ஆ.5 ல் சர்வே எண் 14/10 என குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த சாட்சியம், 2011 ஆம் ஆண்டு பாகப்பத்திரம் வழியுடன் தயார் செய்து அதை நான் கையொப்பமிட மறுக்கவில்லை. பத்திரம் எழுதினார்கள். ஆனால் முற்றுப்பெறவில்லை" என்ற பி.சா.1. -ன் சாட்சியம் ஆகிய அனைத்து அம்சங்களைக் கருத்தில் கொண்டு பார்க்கின்ற போது வாதி, மற்றும் பிரதிவாதிகளுக்கிடையே தாவா சொத்து

WEB COPY

தொடர்பாக சட்டப்படியான ஆவணங்கள் ஏதும் ஏற்படவில்லையென்றும், தரப்பினர்கள் தாவா சொத்தின் பகுதிகளில் இருந்தாலும் கூட சட்ட அங்கீகாரத்துடன் பாகம் பிரிக்கப்படவில்லை என்பதும் வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டிருப்பதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

வழக்குரை, எதிர் வழக்குரை, இருதரப்பு சாட்சிய, சான்றாவணங்களின் பரிசீலனை இருதரப்பிலும் தாக்கல் செய்யப்பட்ட முன் தீர்ப்புகளின் வழிகாட்டுதல் மற்றும் மேலே கண்ட ஆய்வின் அடிப்படையில் வாதி தரப்பு வழக்கு சாட்சிய சான்றாவணங்களின் மூலம் நிரூபிக்கப்பட்டிருப்பதாக தீர்மானிக்கப்பட்டு வாதி கோரியபடி தாவா சொத்து 4 சரி சமபாகங்களாக பிரிக்கப்பட்டு அதில் ஏற்கனவே வாதி வசித்து வரும் பகுதியை வாதி பெறத்தக்கவர் எனவும், வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள முதல் மற்றும் 3-வது பிரதிவாதி தற்போது வசித்து வருகின்ற வீடுகளுக்கு நடுவில் அமைந்துள்ள பொது வழிப்பாதை தவிர வேறுபாதை வாதி மற்றும் மூன்றாவது பிரதிவாதிக்கு இல்லாத நிலையில், இப்பொதுப்பாதை அவர்கள் இருவருக்கும் அத்தியாவசியமானது என்பதால், அப்பாதையை வாதி மற்றும் 3-வது பிரதிவாதி இருவரும் இணைந்து சமஅளவில்/ பொதுவில் அடைய வேண்டியது எனவும், நீண்டகாலம் ஏக குடும்பமாக வாழ்ந்து வந்த வாதி, பிரதிவாதிகள் வழி தொடர்பான சச்சரவுகளின் காரணமாகவே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் வா.சா.ஆ.2 ல் குறிப்பிடப்பட்டிருக்கின்ற வழியைப் பொறுத்தவரை வாதி மற்றும் 3-வது பிரதிவாதி

WEB COPY

சம உரிமைப்படைத்தவர்கள் என்றும் இந்த வழியினை வாதி மற்றும் 3-வது பிரதிவாதி வழியாக பயன்படுத்திக்கொள்ளலாம் எனவும் இந்த வழிப்பாதையின் மூலமாக ஏற்கனவே 1 மற்றும் 2 -வது பிரதிவாதிகள் அனுபவித்து வருகின்ற காற்று, வெளிச்சம், ஏற்கனவே உள்ள ஜன்னல் மற்றும் சன்ஷேடு(Sunshade) உள்ளிட்ட கட்டுமானங்கள், பொருத்தப்பட்டுள்ள குளிர்சாதன இயந்திரங்கள், கழிவுநீர் மற்றும் குடிநீர் குழாய் வழித்தடங்கள் ஏதேனுமிருப்பின் அதற்கான உரிமைகளுக்கு பாதகம் ஏற்படாத வகையிலும் முதல் மற்றும் 2-வது பிரதிவாதியின் பக்கவாட்டு சுவர் பகுதிகளில் ஏற்படுகின்ற கட்டுமான பழுதுகளை சரிபார்த்தல், வர்ணபூச்சு மற்றும் சீரமைத்தல், பராமரித்தல் ஆகிய செயல்களுக்கு வாதி மற்றும் 3-வது பிரதிவாதிகள் இடையூறு ஏற்படுத்தாமலும், வாதி மற்றும் 3-வது பிரதிவாதி ஆகிய இருவரும்வழிப்பாதையை அடைய வேண்டியது என்றும் இவ்விவரங்களை கருத்தில் கொண்டு வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை சமர்பிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்படுகிறது.

18. நிறைவாக தாவா அனுமதிக்கப்படுகிறது. வாதி கோரியபடி தாவா சொத்து 4 சரி சமபாகங்களாக பிரிக்கப்பட்டு அதில் ஏற்கனவே வாதி வசித்து வரும் பகுதியை வாதி பெறத்தக்கவர் எனவும், வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள முதல் மற்றும் 3-வது பிரதிவாதி தற்போது வசித்து வருகின்ற வீடுகளுக்கு நடுவில் அமைந்துள்ள பொது வழிப்பாதை தவிர வேறுபாதை வாதி மற்றும் மூன்றாவது பிரதிவாதிக்கு இல்லாத நிலையில், இப்பொதுப்பாதை அவர்கள் இருவருக்கும்

WEB COPY

அத்தியாவசியமானது என்பதால், அப்பாதையை வாதி மற்றும் 3-வது பிரதிவாதி இருவரும் சமஅளவில்/ பொதுவில் அடைய வேண்டியது எனவும், சமத்துவகொள்கையின்படி எதிர்காலத்தில் தரப்பினர்களுக்குள் வேறு பிரச்சனைகள் ஏற்படாத வகையில் தற்போது வாதி மற்றும் பிரதிவாதிகள் அவரவர் செலவில் வீடு கட்டி அனுபவித்து வருகின்ற அவரவர் பகுதி அவரவர்களுக்கே ஒதுக்கப்படவேண்டும் எனவும், இவ்விவரத்தை வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையின் போது கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் உத்திரவிட்டு முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது. இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்திட வாதி நடவடிக்கை மேற்கொள்ளவும் உத்திரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. தரப்பினர்களின் உறவுமுறையை கருத்தில் கொண்டு செலவுத்தொகை ஏதும் இல்லை.

இந்த தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2018 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி
செங்கல்பட்டு

WEB COPY

<u>வாதிகள்தரப்பு சான்றாவணங்கள்:</u>

1.வா.சா.ஆ.1	19.5.1980	முதல் பிரதிவாதிக்கு பாலகிருஷ்ண ரெட்டியார் மற்றும் மற்றவர்கள் எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரம் எண் 1090/1980
2.வா.சா.ஆ.2	23.5.1980	குடும்ப பாகப்பிரிவினை ஒப்பந்தம்(Family Partition Agreement)
3.வா.சா.ஆ.3	28.9.1995	அங்கீகரிக்கப்பட்ட கட்டிட அனுமதி - சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் மற்றும் ஆலந்தூர் நகராட்சியில் வழங்கப்பட்டது.
4.வா.சா.ஆ.4	-	சொத்துவரி ரசீதுகள் (4 எண்ணிக்கை)
5.வா.சா.ஆ.5	28.6.2012	உரிம ஆவணம் அடமானம் வைத்ததற்கான குறிப்பாணை முதல் பிரதிவாதி சென்டிரல் பாங்க ஆப் இந்தியா வங்கிக்கு எழுதிக்கொடுத்தது. (Memorandum of Title Deeds)
6.வா.சா.ஆ.6	21.6.2015	சொத்து தொடர்பான வில்லங்க சான்றிதழ்
7.வா.சா.ஆ.7	6.5.2014	வங்கிகளுக்கு வாதி வழக்கறிஞரால் அனுப்பப்பட்டவழக்கறிஞர் அறிவிப்பு
8.வா.சா.ஆ.8	-	வழக்கறிஞர்அறிவிப்பு அனுப்பப்பட்டதற்கான ஒப்புதல் அட்டைகள்

WEB COPY

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u>

1.பி.சா.ஆ.1	19.5.1980	1-ம் பிரதிவாதியின் பெயரிலுள்ள தாவா சொத்திற்கான பதிவு கிரைய பத்திர சான்றிட்ட நகல்
2.பி.சா.ஆ.2	26.8.1980	சென்டிரல் பாங்க் ஆப் இந்தியா வங்கியின் மேலாளர் வழங்கிய ஒப்புதல் கடிதம்
3.பி.சா.ஆ.3	16.11.1990	முதல் பிரதிவாதியின் பெயரில் உள்ள நகர நில அளவை பதிவேடு நகல் (T.S.No.11/1) வரைபடத்துடன் உள்ளது
4.பி.சா.ஆ.4	16.11.1990	நகர நில அளவை பதிவேடு நகல் (TS No.11/5) வரைபடத்துடன் உள்ள வாதி, பிரதிவாதிகளின் பெயரில் கூட்டாக பொதுவழிக்காக உள்ளது.

5.பி.சா.ஆ.5	13.3.1981	1-ம் பிரதிவாதியின் பாகத்தில் கட்டுமான வரைபடத்திற்கான அனுமதி
6.பி.சா.ஆ.6 வரிசை	-	மின் நுகர்வு அட்டைகள்(10 எண்ணிக்கை)
7.பி.சா.ஆ.7 வரிசை	-	மின்நுகர்வு கட்டண ரசீதுகள்
8.பி.சா.ஆ.8	-	முதல் பிரதிவாதியின் பெயரில் உள்ள சொத்துவரி ரசீதுகள்
9. பி.சா.ஆ.9	- 26.4.2016	வாதியால் சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.17075/2016-ல் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலம்
10.பி.சா.ஆ.10	16.11.1990	2-ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள நகர நில அளவை பதிவேடு நகல் (Town Survey Filed Register Extract)
11.பி.சா.ஆ.11	3.2.1983	2-ம் பிரதிவாதியின் பாகத்தில் கட்டுமான வரைபடத்திற்கான அனுமதி (Planning Permission)
12.பி.சா.ஆ.12	-	கட்டுமான வரைபடம்
13.பி.சா.ஆ.13 வரிசை	-	மின் நுகர்வு அட்டைகள் (8 எண்ணிக்கை)
14.பி.சா.ஆ.14 வரிசை	-	மின் நுகர்வு கட்டண ரசீதுகள்
15.பி.சா.ஆ.15 வரிசை	-	2-ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள சொத்துவரி ரசீதுகள்
16.பி.சா.ஆ.16 வரிசை	-	2-ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள தொலைபேசி கட்டண ரசீதுகள்
17.பி.சா.ஆ.17	16.11.1990	நகர நில அளவை பதிவேடு நகல் (TS No.11/4) 3-ம் பிரதிவாதியின் பெயரில் உள்ளது
18.பி.சா.ஆ.18	20.5.2016	சென்டிரல் பேங்க ஆப் இந்தியா வங்கியின் மேலாளர் வழங்கிய ஒப்புதல் கடிதம்
19.பி.சா.ஆ.19	28.9.1995	ஆலந்தூர் நகராட்சி ஆணையர் அவர்களின் நடவடிக்கைகள் மற்றும் கட்டுமான அனுமதியுடன் (Planning permit)

WEB COPY

20.பி.சா.ஆ.20	22.8.1995	அங்கீகரிக்கப்பட்ட வரைபடம்
21.பி.சா.ஆ.21 வரிசை	-	மின் நுகர்வு அட்டைகள் (6 எண்ணிக்கை)
22.பி.சா.ஆ.22 வரிசை	-	மின்கட்டண ரசீதுகள்
23.பி.சா.ஆ.23 வரிசை	-	சொத்துவரி ரசீதுகள்
24.பி.சா.ஆ.24	3.7.2017	அடமானப்பத்திரம்

வாதி தரப்பு சாட்சிகள்

1.வா.சா.1. -திரு.ஜி.ஆதிமூலம் (வாதி)

பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்

WEB COPY

1.பி..சா.1 - திரு.ஜி.பூங்காவனம் (முதல் பிரதிவாதி)

2.பி. சா.2 - திரு.ஜி.ராமானுஜம் (2-ம் பிரதிவாதி)

3.பி.சா.3. - திரு.ஜி.மாதவன் (3-ம் பிரதிவாதி)

sd/-Dr.K.Ramanathan

கூடுதல் மாவட்ட நீதிபதி

செங்கல்பட்டு

/TRUECOPY/

WEB COPY

Draft/Fair Judgment
OS No.139/2011
Dt:21.2.2018
ADJ/CPT.(PDF)